தாழ்வு மனப்பான்மையைத் தகர்த்தெறிவது எப்படி?

வாழ்வில் பெரும்பகுதியைக் கழித்து, பெரும் அனுபவக்காரர்களாகத் திகழ்பவர்கள், வாழ்வுக் கலையின் ஆரம்பப் பகுதியில் காலடி எடுத்துவைக்கும் இளைஞர்களுக்குத் தரும் முதல் யோசனை அல்லது, புத்திமதி, ''தன்னம்பிக்கையுடன் விளங்கு'' என்பதாகும். ஒரு மனிதனுக்கு எத்தனை செல்வம், படிப்பு, அறிவு, சக்தி ஆகியவை இருந்தாலும் அவனிடம் தன்னம்பிக்கை இல்லாவிட்டால், அவன் பெரும்பாலும் துன்பச் சூழ்நிலையிலேயே இருப்பான்.

இந்த உலகத்தை,

கல்லும், முள்ளும், பயங்கரப் புதைகுழிகளும் நிறைந்த ஒரு பயங்கரக் காடாகக் கற்பனை செய்யலாம். இப்படிப்பட்ட காடுகளில் பயங்கர மிருகங்கள் வசிக்கும். ஒவ்வொரு மனிதனும் அவன் வாழ்நாளில் இந்த உலகம் என்னும் காட்டைக் கடந்து செல்ல வேண்டியுள்ளது. ஆனால், இந்த 'அபாயங்கள்' மனித உறவு என்னும் விஞ்ஞான அமைப்பில் பல்வேறு பெயர்களில் எதிர்ப் படும். இந்த அமைப்பு மனித நாகரிகத்தின் முன்னேற்றத்தின் படிகளுக்கு ஏற்றவாறு மாறுபடும். ஒவ்வொரு மனிதனுக்கும் சமய சந்தர்ப்பங்கள் வித்தியாசப்படும்.

காடு மட்டுமன்றி, மனிதன் வேறொரு பயங்கரத்தையும் சமாளிக்க வேண்டும். அதுதான் -

அவனது உடல், உள்ளம் ஆகியவற்றின் தன்மை.

இன்று மனித நாகரிகம் மிக முன்னேறி இருக்கிறது. பல இலட்சம் ஆண்டுகளின் சரித்திரம் மனித சமுதாயத்தின் பின் அடங்கியுள்ளது.

இத்தகைய நிலையில், காலம், அளவு, எண்ணிக்கை ஆகிய எல்லையற்ற விஷயங்களை உள்ளடக்கிய இந்த உலகில் சிறைப்பட்டிருக்கும் மனிதன், ஓர் இயந்திரமாய் வாழ்ந்து கொண்டிருக்கிறான். இத்தகைய சூழ்நிலை அவன் வாழ்க்கையைச் செம்மையாக நடத்திச் செல்ல உதவுவதில்லை. மனிதனின் அறிவு விருத்தியடைந்து, அவன் தன்னைத் தானே நெறிப்படுத்திக் கொள்வதில் ஓரளவு தேறியிருந்தாலும், அவன், இயற்கை, காலம், சக மனிதர்கள் போன்ற சூழ்நிலையில் 'வாழ்ந்தே' தீர வேண்டியுள்ளது.

மனிதன் இதற்காகச் சோர்ந்து போக வேண்டியதில்லை. மனிதப் பிறவி எடுப்ப தற்குப் பெரும் தவம் செய்திருக்க வேண்டும்.

நாம் ஏன் ஈயாகவோ, எறும்பாகவோ பிறக்காமல் ஆறறிவு படைத்த மனிதராகப் பிறந்துள்ளோம் என்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். மனித உள்ளத்தின் வேகமானது, ஒலி, ஒளி ஆகியவற்றின் வேகத்தையும் மிஞ்சி, கற்பனை உலகத்தின் எட்டாத உயரத்திலெல்லாம் பறக்கும். மனிதனின் கற்பனை உலகத்தில் அவனே கடவுளாகக் கூட மாறலாம். பௌதிகச் சக்தி குறைந் திருப்பினும், மனிதனின் மனோ சக்தி அளவிட முடியாதது.

ஆனால், மனிதன்,

மனிதனாக வாழ வேண்டும். அவன் தனது மதிப்பையும், தன்னால் மற்றவர் களுக்கு ஏற்படக்கூடிய உதவிகளையும் நிரூபிக்க வேண்டும். தன் சொந்தப் பிரச்சினைகளுடன், மற்றவர்களுக்காகவும், அநேக சோதனைகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்க வேண்டியது அவசியமாகிறது. இப்படிப்பட்ட அமைப்பில், எல்லோருடைய

நலனும் பாதுகாக்கப்பட இடமிருப்பதால், தனி மனிதன், ஒன்று வெற்றியடைகிறான்; அல்லது வீழ்ச்சியடைகிறான்.

மனிதனின் வெற்றியும் வீழ்ச்சியும் அவனது மனத்தைப் பொறுத்து அமையும். மனத்தை நாம் கட்டுப்பாட்டில் வைத்திருப் பதைப் பொருத்து, அது வரப்பிரசாதமாகவோ சாபமாகவோ அமையும்.

தமது சக்தியின் வரையறைகளை அறிந்து, இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழவேண்டும்.

இதற்குத் தேவை,

மனத்திருப்தியாகும்!

மனித சரித்திரத்தைப் புரட்டிப் பார்த்தால் நாம் புதிதாக உணர வேண்டியது ஒன்று மில்லை என்று தெரியும். புதிய அனுபவங்களும் வீழ்ச்சியிலிருந்து நம்மைக் காப்பாற்றிவிடா.

இத்தகைய மனமுதிர்ச்சி மனிதனின் கீழ்த்தர உணர்ச்சிகளை மங்கச் செய்கின்றது.

சில சமயங்களில் உலக இன்பங்களில் அதிக நாட்டம் கொண்ட மனிதன்கூட, எல்லாவற்றையும் துறந்து மற்றவர்களுடன் எப்படி வாழ்வது என்று கற்றுக் கொள்ள முடியும்.

மற்றவர்களுடன் அனுசரித்து வாழ்வது ஒரு கலை. இந்த அனுசரித்துப் போகும் தன்மை இருந்தால் தோல்வி ஏற்படும் போது சுலபமாகச் சமாளிக்கலாம். திருப்தியான மனப்பாங்கு இருந்துவிட்டால் மனிதன் சுலபமாகச் செயல் புரியலாம். அதன் பலன் எதுவாக இருப்பினும் தாங்கிக் கொள்ளலாம். இத்தகைய மனப்பாங்குதான் முக்கியமே தவிர, பணமோ, ஏழ்மையோ காரணம் அல்ல. எனவே பணத்தால் பின் தங்கியுள்ளவர்கள் வீணான எண்ணங்களை மனத்தில் நிரப்பிக் கொள்ள வேண்டியதில்லை.

சாதனை புரிவதற்கும், கஷ்டங்களைத் தாங்குவதற்கும் மனப்பக்குவம் தேவைப் படுகிறது.

நாகரிக வாழ்வின் அடிப்படை -

நன்மை தீமை இரண்டையும் சமமாகக் கருதுவதாகும்.

மனோதிடமற்ற மனிதன் எதிர்காலத் திட்டங்களைச் சரிவர வகுக்கமாட்டான். அவனது மனம் வீணாகச் சஞ்சலமடையும். அமைதியற்ற மனத்திற்கு, சிந்தித்து ஏற்படுத்திக் கொள்ளும் மனோதிடம் ஒரு நல்ல மருந்தாகும்.

மனத் திடம் கொள்வதற்குத் தன்னம்பிக்கை மிக அவசியம். மனிதனுக்குத் தன்மீதும் எதிர் காலத்தின் மீதும் நம்பிக்கை இல்லாவிடில், அவனது மற்ற தகுதிகள் பயனளிக்காமல் போய்விடும். வெற்றி நிச்சயமாக இருக்காது; தோல்வி நிச்சயமாக அவனுக்குக் காத்திருக்கும்.

தன்னம்பிக்கை என்பது சுய கணிப்பு இல்லாமல் அமையாது. ஒவ்வொரு மனிதனும் தன்னைத்தானே நன்கு உணர வேண்டும்.

தனது மனோ நிலையை நன்கு உணர்ந்த மனிதனால், அதைப் பதப்படுத்தித் தனக்கும், சமுதாயத்திற்கும் தேவையான வளமான எதிர்காலத் திட்டங்களை வகுக்க முடியும்.

மனிதனின் மனோ நிலையானது அவனது சிந்தனைத் திறத்தையும், அதை இயக்கும் அவனது மூளையின் சக்தியையும் பொருத்து அமையும்.

இயற்கையில், அறிவில் ஒவ்வொரு மனிதனும் வித்தியாசப்படுகிறான். ஆகவே, எல்லா மனிதர்களுக்கும் ஒரே விதமான மனப் பாங்கு இருக்க வேண்டும் என எதிர்பார்க்க முடியாது. இரண்டு மனிதர்கள், சில விஷயங் களில் கருத்து ஒற்றுமை கொண்டிருந்தாலும் பல விஷயங்களில் வேறுபாடு கொண்டிருப்

பார்கள். காரணம், இந்த உலகம் பிரும் மாண்டமானது. அதில் உள்ள விஷயங்கள் கணக்கிலடங்காதவை. இவையத்தனையை யும் ஒரே மனிதனால் கிரகித்துக் கொள்ள முடியாது.

மேலும்,

ஒவ்வொரு மனிதனின் நடவடிக்கை களும் அவனது தொழிலுக்குத் தகுந்தவாறு மாறுபடும். அவனது தொழிலே அவனது மனத்தையும் பக்குவப்படுத்துகிறது. தொழில் மட்டுமின்றி, மனிதனுக்கு மனிதன் சமூக அந்தஸ்தும் வேறுபடுகிறது.

ஆகவே,

தொழில், அந்தஸ்து, அறிவு ஆகிய இத்தனை மாறுபாடுகளுக்கிடையே எல்லோ ருடைய மனமும் ஒரே மாதிரியாக இயங்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.

ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய கவனத்தை 'உட்புறம்' (Inwards) செலுத்துவது நல்லது. காரணம், அப்போதுதான் நமது நேர்மையும் குற்றமும், பலமும் பலவீனமும், விருப்பமும் வெறுப்பும் நமக்கே புரியும்.

பலவீனமான மனம் சரியாக இயங்காது. எப்போதும் பாரமான நினைவுகளைச் சுமந்து கொண்டிருக்கும்! சரியாகத் திட்டம் வகுக்கவோ, சந்தர்ப்பச் சூழ்நிலைகளை எடைபோடவோ அதனால் முடியாது.

ஆனால்,

திடமான மனது எப்போதும் விழிப்புடனும், அமைதியுடனும், தெளிவுடனும் செயல் படும். இந்த நிலையில், பிரச்சினைகளைத் தீர்ப்பதிலோ, உடலுக்கோ உள்ளத்திற்கோ வரும் கஷ்டங்களைத் தாங்குவதும் எளிதாக இருக்கும்.

திடமான மனமிருந்தால், வெற்றி தோல்விகளைச் சமமாகக் கருதி,

இயற்கையான கஷ்டங்களையும் சமூக அநீதிகளையும் தாங்க முடியும்.

தொழில், செல்வம், அந்தஸ்து, உடல் சக்தி ஆகியவையே மன உறுதிக்கு அடிப்படை. சில மனிதர்கள் அரச குடும்பத்தில் பிறந்திருந்தாலும் மனோதிடமும் இல்லாமல், எதையுமே குறைபாடு இருப்பதாக நினைப்பர். எப்போதுமே தலை நிமிர்ந்து பேசவும் சங்கோஜப்படுவார்கள். இத்தகைய மனிதர்களைப் பீடித்திருப்பது,

'தாழ்வு மனப்பான்மை.'

தனி மனிதனைப் பொருத்தவரை தாழ்வு மனப்பான்மை இயற்கையாக அமையக்கூடிய ஒன்றாகும். உயர்ந்த மனப்பான்மை உடையவர்களால் கஷ்டங்களைக் கடந்து வெற்றி காண முடிகிறது. தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள் எதிலும் பின்தங்கிக் கஷ்டப் படுவார்கள்.

ஆனால்,

இந்தக் காலத்தில் ஒரு மனிதனுக்குத் தாழ்வு மனப்பான்மை இருப்பதில் நியாயம் இருப்பதாகத் தோன்றவில்லை. இந்த உலகம் மிகமிக முன்னேறியுள்ளது. எந்தத் தனி மனிதனுக்கும் சுதந்திரம், வேலை உரிமை, அமைதியான வாழ்வு ஆகியவை மறுக்கப்படவில்லை.

ஆனால், 'சமுதாயம் மனிதனைச் சிருஷ்டிக்கிறது' என்பதையும் மறுக்க முடியாது. சமுதாயச் சட்டங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் ஆகியவை மனிதனின் வாழ்வில் பெரும் பங்கு வகிக்கின்றன. அவனது குணாம்சங்களுடன் எத்தனை நல்ல குணமும் அறிவும் பெற்றிருப்பினும் சமுதாயம் அவனை அராஜகத்திற்குள்ளாக்கினால் ஒரு மனிதன் எப்படி முன்னேற முடியும்?

சமூகமும் தனி மனிதனும்

சமுதாயத்திற்கும், அதற்கு அங்கமாக உள்ள தனிநபர்களுக்குமிடையேயுள்ள உறவைப்பற்றி ஆராய்வது அவசியம். 'சமுதாயமே மனிதனை ஆக்குகிறது' என்பதனால் ஒரு மனிதன் சமூகத்தின் கோட்பாடுகளுக்கு எப்படித் தலை வணங்கு கிறான் என்றும், அவனது நடவடிக்கைகளைச் சமூகம் எப்படி வரவேற்கிறது என்றும் பார்க்க வேண்டும்.

சமுதாயத்திற்கும் மனிதனுக்கும் உள்ள உறவானது எண் கணக்கோ அல்லது சிறு துளி பெருவெள்ளம் என்னும் பௌதிகக் கணக்கோ அல்ல. அது இயற்கையான ஓர் அமைப்பும் அல்ல.

அது,

மனிதனின் ஏற்பாடே ஆகும். அது, காலத்தின் போக்கில் மாறுதல்களுக்கு

இலக்கானது. சமுதாய முன்னேற்றமானது, தனி மனிதன் எவ்வாறு சமுதாயத்தை உருவாக்குகிறான் என்பதைப் பொருத்து அமைந்ததே அன்றி, அதன் கோட்பாடு களுக்கு மனிதன் எப்படி அடிபணிகிறான் என்பதால் அல்ல.

ஆனால்,

சமுதாயத்தை ஒரு தனி மனிதன் சீர்த்திருத்துவது என்பது சாதாரண விஷயமல்ல. சீர்திருத்தத்திற்கு மட்டுமின்றிச் சொந்த வாழ்க்கைக்கும் மனோதிடம் ஒவ்வொரு மனிதனுக்கும் தேவைப்படுகிறது. எளிய மனிதர்கள் எப்போதும் பின் தங்கியே இருப்பார்கள். காரணம், அவர்களின் பலவீனமும் அறியாமையுந்தான். இத்தகைய நிலை மனித சரித்திரத்தின் எந்தக் காலத் திற்கும் பொருந்தும். ஆகவே, சமுதாயத்தில் பின்தங்கியவர்கள் கற்க வேண்டிய பாடங்கள் அநேகம். இந்தப் பாடங்களைக் கற்பதற்கும்

கல்வித் திட்டத்தில் ஏராளமான விஞ்ஞானங்கள் உள்ளன.

'பின்தங்கியவர்' என்னும் பதத்தைச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஒரு மனிதன் பொருளாதார நிலைமையிலோ உடல் வலிமையிலோ பின்தங்கி இருக்கலாமே தவிர, உயர்ந்த இலட்சியங்களிலும் நோக்கங்களிலும் மற்ற மனிதப் பண்புகளிலும் முன்னேறியிருப்பானானால், அவன் பின்தங்கியவன் என்று அர்த்தம் அல்ல. அதாவது, செல்வத்தில் ஒருவன் ஏழையாக இருப்பினும் உயரிய பண்பாட்டிலும் இலட்சியத்திலும் அவன் வளம் படைத்தவனாக இருக்கத் தடையேதும் இல்லை.

ஆகவே,

தனிமனிதன் தனது வாழ்க்கையைச் செப்பனிட்டுக் கொள்வதுடன், சமுதாயத்தையும் வளமுள்ளதாக மாற்ற, நல்ல வாழ்க்கை நெறிகளைக் கடைப்பிடிக்கும்

சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கு, பொருள் வளம் மட்டுமே அத்தியாவசியமானது அல்ல.

சமுதாயம் அவனைப் பல வழிகளிலும் துன்புறுத்த முயலும். இப்படிப்பட்ட சமுதாய நடவடிக்கைகளில் குறிக்கோள் ஏதும் இருக்காது. சமுதாயத்தின் சார்பில் பொறுப்புடன் பேச யாரும் முன் வரமாட்டார்கள். ஆனால் தனி மனிதனைக் கவிழ்ப்பது என்ற காரியம் வருமானால் எல்லாரும் சேர்ந்து கொள்வார்கள். இப்படிப்பட்ட நெருக்கடி நிலைகளில் தனி மனிதன் அவற்றை எளிதாக நினைத்து, அலட்சியமாக இருந்து விட வேண்டும். ஏனெனில், இந்தச் சோதனைகளில் பொது நன்மையும் கலந்துள்ளது என்ற பெருத்த மனப்பாங்கு அவசியமாகிறது.

சோர்வுற்ற மனம் உள்ளவர்களுக்கு ஊக்கம் அளிப்பதும், சீர்திருத்தவாதியின்

கடமையாகும். சோம்பேறித்தனமும், தாழ்வு மனப்பான்மையும் கவனிப்பு இன்றி வளருமானால், அதனால் சமுதாயத்திற்குப் பெருத்த கெடுதல்கள் உண்டாகும். எந்த ஒரு மனிதனும் முன்னேறி விடுவான் என்ற இயற்கையான நியதி இல்லாததால், உயர்ந்த மனிதர்கள், பண்படாதவர்களைப் பண்படுத்தும் கடமையை ஏற்க வேண்டும்.

மனித வாழ்க்கை எவ்வளவு உயர்ந்தது?

மனித வாழ்க்கையின் மேன்மையை எண்ணிப் பாருங்கள். நற்பண்புகளுடன் முழுமையான வாழ்க்கை நடத்தும் மனிதனை உலகம் என்றும் மறக்காது.

இப்படிப்பட்ட நிலைக்கு எவருமே தகுதியுள்ளவர்தாம் என்பதில் எள்ளளவு சந்தேகமும் கிடையாது. அப்படியிருக்கும் போது வீணாகத் தாழ்வு மனப்பான்மை கொண்டு உடலையும் உள்ளத்தையும் ஏன் சுருக்கிக் கொள்ள வேண்டும்?

ஒவ்வொரு மனிதனுக்கும் தன்னிச்சை யான உள்ளம் ஓரளவு இருக்கத்தான் செய்யும். இந்தச் சுதந்திரமான மனோபாவம் இல்லாவிட்டால் வாழ்க்கையில் அர்த்தமோ விறுவிறுப்போ இருக்காது. மனிதனாகப் பிறப்பது என்றால், இயற்கை அன்னையின் செழிப்பை நன்றியுடன் பெற்று, பல சோதனைக் கட்டங்களை மகிழ்ச்சியுடன் ஏற்பது என்று கொள்ளலாம்.

பல்லாயிரக்கணக்கான ஜீவராசிகளுக்குத் தலைவனாக மனிதனைக் கொண்டுள்ள இவ்வுலகம், மிகவும் விசித்திரமானது. ஒரு கதையின் நாயகனைப் போல, மனிதனுக்கு பல சோதனைகளைக் கடந்து வெற்றி பெறு வதற்கு மட்டுமின்றி, அவனது சக்திக்குட் பட்ட சிருஷ்டிகளை மேற்கொள்ளவும் வாய்ப்புகள் ஏராளமாக உள்ளன.

அதே சமயம் துன்பமும் மனிதனை ஆட்படுத்தும் போது, அவன் அமைதியிழந்து,

சோர்ந்து வீழ்கிறான். இயற்கையான சுகங்களை மறந்து பல செயற்கையான சுகங்களில் ஈடுபடத் தொடங்குவதுதான் மனிதனின் பெரும்பாலான துன்பங்களுக்குக் காரணமாக அமைகிறது. சில மனிதர்கள் எல்லாம் தம் கைகளுக்குள் அடங்கியுள்ளன போல், தமக்கென்று ஒரு கோட்டை கட்டிக் கொண்டு, இயற்கையின் எந்தப் பாதிப்பும் தம்மீது படாதவாறு வாழத் தலைப் படுகின்றனர்.

வெறுப்பு ஏற்படும்போது, அபசகுனத் தத்துவ ஆசிரியரைப்போல, ‘‘பிறக்காம லிருப்பது சிறந்தது; பிறந்து விட்டால் தற்கொலை செய்து கொள்வது மிகச் சிறந்தது’’ என்று வறட்டு வேதாந்தம் பேசத் தலைப்படுகின்றனர்.

வாழ்க்கையில் சில தனிப்பட்ட அறைகூவல்கள் உள்ளன. இத்தகைய அறைகூவல்கள் இரண்டு வகைப்படும்.

ஒன்று இயற்கையை வெற்றி பெறுவது; மற்றது, மனிதன் தன்னைத்தானே அடக்கி ஆள்வது. எல்லையற்ற கடலில் செல்லும் ஒரு சிறிய கப்பலைப் போல மனிதன், வாழ்க்கை என்னும் பெரிய கடலில் சிறிய கப்பலாகச் செல்கிறான். இதில் எழும்பும் மிகப்பெரிய அலைகளை சமாளிக்க வேண்டி யிருந்தாலும், கப்பலைத் தன் இஷ்டத்திற்குச் செலுத்த அவ்னிடம் சில சாதனங்கள் உள்ளன அல்லவா?

மனித வாழ்க்கையின் மேன்மையையும் தங்களுடைய மேன்மையையும் சில மனிதர்கள் உணராததால்தான், அவர்க ளுடைய வாழ்வில் பல துன்பங்கள் ஏற்படு கின்றன. நம்முடைய வாழ்வில் மிகவும் சோகமானது மரணம் என்று பலர் எண்ணிக் கொண்டுள்ளனர். உண்மையில் அது மரணமல்ல, முழுமையான வாழ்க்கையை நடத்தும் திறமையும் தகுதியும் இல்லாம லிருப்பதே அது!